Further, pursuant to Section 91 of the Companies Act, 2013 (the Act) and Regulation 42 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 (the Listing Regulations), the Register of Members and Share Transfer Books of the Company will remain closed from Friday, 8th September, 2023 to Friday, 15th September, 2023 (both days inclusive) for taking record of the Members of the Company for the purpose of AGM.

As per Section 108 of the Act read with Rule 20 of the Companies (Management & Administration) Rules, 2014, as amended and Regulation 44 of the Listing Regulations and Secretarial Standards on General Meetings (SS-2) issued by Institute of Company Secretaries of India, the Company is pleased to offer e-voting facility for its members to enable them to cast their votes electronically for items of business mentioned in AGM Notice, with the help of National Securities Depository Limited (NSDL). Additionally the Company is providing the facility of voting through e-voting system during the AGM("e-voting").

The details pursuant to the provisions of the Act read with relevant rules are provided hereunder:

a) the business (ordinary and special) as mentioned in the AGM Notice may be transacted by electronic means;
b) the remote e-voting facility shall start on Tuesday, 12th September, 2023 at 9:00 a.m.;
c) the remote e-voting facility shall end on Thursday, 14th September, 2023 at 5:00 p.m.;
d) the cut-off date for determining eligibility to vote by member through remote e-voting or at the AGM shall be Thursday, 7th September, 2023;
e) the record date for payment of dividend, if approved by the members at the AGM shall be Thursday, 7th September, 2023;
f) exercising of e-voting shall not be allowed beyond 5:00 p.m. on Thursday, 14th September, 2023 and such facility will be disabled after the aforesaid date and time. Once the vote on a resolution is cast by member, the member shall not be allowed to change it subsequently;
g) any person, who acquires shares of the Company and becomes a Member of the Company after sending of the Notice and holding shares as of the cut-off date, may obtain the login ID and password by sending a request at evoting@nsdl.co.in. However, if he/she is already registered with NSDL for remote e-voting then he/she can use his/her existing User ID and password for casting the vote.;
h) a member may participate in the AGM even after exercising his/her right to vote through remote e-voting but shall not be allowed to vote again e-voting system during the AGM;
i) a person whose name is recorded in the register of members or in the register of beneficial owners maintained by the depositories as on the cut-off date only shall be entitled to avail the facility of remote e-voting or voting in the AGM;
j) Detailed procedure for remote e-voting, attending the AGM through VC/OAVM and e-voting for all members is provided in the Notice of the AGM.
k) the Notice convening the AGM alongwith Annual Report for financial year 2022-23 is hosted on the website of the Company i.e. www.kempnco.com, website of the Stock Exchange i.e. BSE Limited at www.bseindia.com, and on the website of NSDL https://www.evoting.nsdl.com. and
l) In case of any grievances regarding e-voting, the members may refer to the FAQs for Shareholders and e-voting user manual for Shareholders available at the download section of https://www.evoting.nsdl.com or call on toll free no.: 1800-222-990 or send a request at evoting@nsdl.co.in or may contact Mr. Karan Gudhka, Company Secretary at 5th Floor, DGP House, 88-C, Old Prabhadevi Road, Mumbai – 400 025 or on Ph. No. +91 022 6653 9000 or email at kemp-investor@kempnco.com

By order of the Board of Directors
For KEMP & COMPANY LIMITED
Sd/-
Karan Gudhka
Company Secretary

Place: Mumbai
Date: 25th August, 2023

தமிழ் முரசு

### வடசென்னையில் 6 பேருந்து நிலையங்களை

# அதிநவீன வசதிகளுடன் மேம்படுத்த திட்டம்

## சிஎம்டிஏ அதிகாரிகள் தகவல்

**சென்னை, ஆக.26-** வடசென்னையில் திரு.வி.க நகர் உள்ளிட்ட 6 பேருந்து நிலையங்கள் அதிநவீன வசதிகளுடன் மேம்படுத்தப்பட உள்ளது என சிஎம்டிஏ அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென்னையில் உள்ள முக்கிய பேருந்து நிலையங்கள் சரியாக பராமரிக்கப்படாததால் பயணிகளுக்கு பெரும் சிரமம் ஏற்படுகிறது. குறிப்பாக வடசென்னையில் உள்ள பேருந்து நிலையங்களில் பொதுமக்களுக்கான கழிப்பறை, முறையாக பராமரிக்கப்படுவதில்லை. பேருந்து நிலைய வளாகத்தில் கழிவுநீர் தேங்கி, கடும் துர்நாற்றம் வீசுகிறது. இதனால் பயணிகள் அவதியடைந்து வருகின்றனர்.

கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்கு மேலாக திரு.வி.க நகர் மற்றும் வடசென்னையில் உள்ள பேருந்து நிலையங்களில் உள்ள கழிவறைகள் மோசமான நிலையில் உள்ளதாகவும், இவற்றை சரி செய்யவேண்டும் எனவும் பொதுமக்கள் வலியுறுத்துகின்றனர்.

இந்த நிலையில் திரு.வி.க நகர், தண்டையார்பேட்டை, கண்ணதாசன் நகர், முல்லை நகர், பெரியார் நகர் மற்றும் அம்பத்தூர் எஸ்டேட் ஆகிய 6 பேருந்து நிலையங்களை மறுசீரமைக்க சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் (சிஎம்டிஏ) திட்டமிட்டு உள்ளது.

இது தொடர்பாக சிஎம்டிஏ அதிகாரிகள் கூறியதாவது:

திரு.வி.க நகர் உள்ளிட்ட வடசென்னையில் உள்ள 6 பேருந்து நிலையங்கள் அதிநவீன வசதிகளுடன் மேம்படுத்தப்பட உள்ளன. நவீன கூரை, சோலார் பேனல்கள், சுத்தமான கழிவறைகள், இருக்கை வசதிகள், குடிநீர் வசதி, காத்திருப்பு அறைகள், சிசிடிவி கேமராக்கள் மற்றும் கடைகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்படும்.

திரு.வி.க.நகர் மற்றும் அம்பத்தூரில் உள்ள பேருந்து நிலையங்களில் மறுசீரமைப்பு பணி தொடங்கி உள்ளது. அடுத்த ஆண்டு இறுதிக்குள் அனைத்து பணிகளும் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒவ்வொரு பேருந்து நிலையத்திற்கும் சிறந்த கட்டிடக்கலை நிபுணர்கள் தயாரித்த வடிவமைப்புகள் இறுதி செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு சிஎம்டிஏ அதிகாரிகள் கூறினர்.



சென்னை மெரினா உட்புற சாலையில் இன்று காலை ஏராளமானோர் நடைபயிற்சி சென்றனர்.



வரலட்சுமி விரதத்தையொட்டி திருப்பதி அடுத்த திருச்சானூர் பத்மாவதிதாயார் கோயிலில் நேற்று தங்கத் தேரோட்டம் நடந்தது.

### திருப்பதி ஏழுமலையான் கோயிலில்

# உண்டியல் காணிக்கை ₹3.85 கோடி

**திருமலை, ஆக.26-** திருப்பதி ஏழுமலையான் கோயிலில் நேற்று 69,529 பக்தர்கள் தரிசனம் செய்தனர். 29,227 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர். கோயில் உண்டியலில் ₹3.85 கோடி காணிக்கை செலுத்தினர். இன்று காலை நிலவரப்படி வைகுண்டம் கியூ காம்ப்ளக்சில் உள்ள 9 அறைகளில் பக்தர்கள் காத்திருக்கின்றனர். இவர்கள் சுமார் 14 மணிநேரம் காத்திருந்து தரிசனம் செய்து வருகின்றனர். ₹300 டிக்கெட் பெற்ற பக்தர்கள் சுமார் 1 மணிநேரம் காத்திருந்து தரிசனம் செய்தனர்.

# கடற்கரையில் ஒதுங்கிய 40 கிலோ கஞ்சா பொட்டலங்கள்

## வேதாரண்யம் அருகே பரபரப்பு

**வேதாரண்யம், ஆக. 26-** வேதாரண்யம் அருகே கடற்கரையில் இன்று 40 கிலோ கஞ்சா பொட்டலங்கள் கரை ஒதுங்கியது. சுங்கத்துறையினர் அவற்றை கைப்பற்றி விசாரணை நடத்தி வருகின்றனர்.

நாகை மாவட்டம் வேதாரண்யம் அடுத்த கோடியக்கரை கடற்கரை அருகே நான்கரை கி.மீ., தூரத்தில் இன்று காலை 6 மணிக்கு கஞ்சா பொட்டலங்கள் கரை ஒதுங்கி கிடந்தது. கடலில் மீன் பிடிப்பதற்காக சென்ற மீனவர்கள் இதைப்பார்த்து கோடியக்கரை சுங்கத்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் கோடியக்கரை சுங்கத்துறையினர் சென்று பார்வையிட்டனர்.

அப்போது பிளாஸ்டிக் கவர்களில் சுற்றப்பட்டு 20 பிளாஸ்டிக் கவர் பொட்டலங்களில் தலா 2 கிலோ வீதம் 40 கிலோ கஞ்சா கரை ஒதுங்கி கிடந்தது தெரியவந்தது. இதையடுத்து கஞ்சா பொட்டலங்களை சுங்கத்துறை அலுவலகத்துக்கு எடுத்து சென்றனர். மேலும் போலீசார் வழக்குப்பதிந்து இலங்கைக்கு கடத்தி சென்றபோது படகுகளில் இருந்து கஞ்சா பொட்டலங்கள் கடலில் தவறி விழுந்ததா அல்லது ரோந்து கப்பல் வந்ததால் கடத்திச்சென்றவர்கள் பயந்து கஞ்சா பொட்டலங்களை கடலில் தூக்கி வீசி விட்டு சென்றனரா, இந்த கடத்தலில் யார் ஈடுபட்டது, வேதாரண்யத்தை சேர்ந்த யாருக்காவது இதில் தொடர்பு உள்ளதா என்று பல்வேறு கோணங்களில் விசாரித்து வருகின்றனர். கரை ஒதுங்கிய கஞ்சா பொட்டலங்களின் மதிப்பு சுமார் ரூ.10 லட்சம் இருக்கும் என்று கூறப்படுகிறது.



கடற்கரையில் ஒதுங்கிய கஞ்சா பொட்டலங்கள்.

ஆகஸ்ட் 26, 2023 சனிக்கிழமை

# அவசிய பயிற்சி!

இந்தியாவில் தோன்றி வளர்ந்த ஒழுக்க நெறி யோகா. உடல், மனம், அறிவு, உணர்வு, சக்திபுதன்மை மற்றும் ஆன்மிக வளர்ச்சிக்கும், சமநிலையில் வாழ்வதற்கும் உரிய கலை பயிற்சியாக யோகா விளங்குகிறது.

கட்டுடலுடன் மனதையும் கட்டுக்கோப்பாக வைத்திருக்க உதவும் யோகா பயிற்சியை செய்ய எந்த ஒரு உபகரணங்களும் தேவையில்லை. மருந்துகள் இல்லாமல் நோயை விரட்டுவது இதன் தனித்துவ குணம். யோகாவில் ஏராளமான ஆசனங்கள் உள்ளன. கல்வியை போல தான் இதுவும் கடல் போன்றது. இருப்பினும் தினமும் 20 முதல் 30 நிமிடங்கள் வரை அடிப்படை யோகா பயிற்சிகளை செய்தாலே நாள் முழுவதும் சுறுசுறுப்பாக உழைக்கும் ஆற்றலை தருகிறது.

இன்றைய குடும்ப, பணி சூழல் மன அழுத்தம் நிறைந்ததாக மாறி இருக்கிறது. மன அழுத்தத்தை வெகுவாக குறைக்கும் சிறந்த நிவாரணியாக யோகா விளங்குகிறது. எதிர்மறை எண்ணங்களுக்கு இடம் கொடுக்காமல், நேர்மறை எண்ணங்கள் கொண்டவர்களால் தான் ஒரு செயலை சாதிக்க முடியும் என்பது அனைவராலும் அறியப்பட்ட விஷயம். இந்த நேர்மறை எண்ணங்களுக்கு உரிய ஆற்றல் யோகா செய்வதன் மூலம் அதிக அளவில் கிடைக்கிறது.

நேர்த்தியான முறையில் வளைந்து பயிற்சி செய்வதன் மூலம் தசைகளும், எலும்புகளும் வலுவடைகிறது. நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது. உடல் எடையை குறைக்கிறது. இன்றைய உலகில் சர்க்கரை நோய், ரத்த அழுத்தம் பரவலான வியாதியாக உருவெடுத்துள்ளது. யோகாவின் மூலம் இந்த வியாதிகளை கட்டுக்குள் கொண்டு வர முடியும். அனைத்து நேரங்களிலும் மகிழ்ச்சியாக இருக்கவும், சிறந்த தூக்கத்திற்கும் யோகா உதவுகிறது.

யோகாசனத்தின் ஒட்டு அமைப்பு, செரிமான செயல்முறை, நரம்பு மற்றும் நாளமில்லா அமைப்புகளை தூண்ட உதவுகிறது. சுவாச பயிற்சிகள் நுரையீரலின் திறனை அதிகரிக்கிறது. தியானம் மன அமைதியை மேம்படுத்துகிறது. இளமையாகவும், புத்துணர்ச்சியுடனும், சுறுசுறுப்பாகவும் இருப்பதை யோகா செய்பவர்களால் உணர முடிகிறது.

உடல் ஆரோக்கியமும், மன ஆரோக்கியமும், சமுதாய நலனும் மேம்படும் என்பது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டு விட்டதால் உலகெங்கும் யோகா இப்போது நடைமுறைப்பழக்கமாக ஆகிவிட்டது. உலகெங்கும் உள்ள சோதனைச் சாலைகளில் யோகா பற்றிய ஏராளமான ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. அவை வியத்தகு முடிவுகளை அறிவித்துள்ளன. 'தியானத்தின் மூலமாக மிக அதிக ஓய்வு நிலையைப் பெறுவதால் உடல் இயக்கம் நம்ப முடியாதபடி குறைந்து ஆக்சிஜன் தேவையை வெகுவாகக் குறைக்கிறது' என்று ஒரு ஆய்வு முடிவு தெரிவிக்கிறது.

தியானம் மற்றும் எளிய ஆசனங்கள் எல்லையற்ற பயனைத் தருபவை. ஆரோக்கியத்திற்கான அற்புதத் திறவுகோல் இது. மாரடைப்பு, புற்றுநோய், பக்கவாதம் போன்ற கொடிய நோய்களை வரவிடாமல் செய்யும் அற்புத வழி இது. எனவே தினமும் யோகா செய்து நலமுடன் வாழ்வோம்.

### 9முதல் 12ம் வகுப்பு வரை பயிலும்

# அனைத்து பள்ளி மாணவர்களுக்கும் மனநலம், வாழ்வியல் திறன் பயிற்சி

## ஹைடெக் லேப் மூலம் வழங்க நடவடிக்கை

**சேலம், ஆக. 26-** தமிழகத்தில் 9 முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் அனைத்து பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும், ஹைடெக் லேப் மூலம் மனநலம், வாழ்வியல் திறன் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

தமிழகத்தில் கடந்த 2022-23ம் கல்வியாண்டில் மாநிலம் முழுவதும், கல்வியில் பின்தங்கிய 44 வட்டாரங்களில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு, மனநலம் மற்றும் வாழ்வியல் திறன் சார்ந்த பயிற்சி வழங்கப்பட்டது. இதற்காக உருவாக்கப்பட்ட மாணவர் கையேட்டில் வடிவமைக்கப்பட்டுள்ள செயல்பாடுகள், தற்போது டிஜிட்டல் முறையில் மாற்றப்பட்டு, எமிஸில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து, நடப்பு கல்வியாண்டில் அனைத்து உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் அமைந்துள்ள உயர்த்தொழில்நுட்ப ஆய்வகத்தின் (ஹைடெக்லேப்) மூலமாக, மாணவர்களுக்கு பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து கல்வித்துறை அதிகாரிகள் கூறியதாவது: தமிழகத்தில் நடப்பாண்டு அனைத்து பள்ளி மாணவர்களுக்கும் மனநலம், வாழ்வியல் திறன் சார்ந்து பயிற்சி அளிக்கும் வகையில், ஏற்கனவே முதுகலை ஆசிரியர்களுக்கு குறுவள மையம் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, 9, 10ம் வகுப்புகளுக்கு கற்பிக்கும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு, இம்மாத இறுதியில் பயிற்சி வழங்கப்படவுள்ளது. அத்துடன், இம்மாதம் முதல் பிப்ரவரி மாதம் வரை மாணவர்களுக்கு பயிற்சி அளிக்ககால அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த பயிற்சியின் ஒவ்வொரு செயல்பாடுகளும், வாழ்வியல் திறனை அறிமுகப்படுத்தும் வகையில் காணொலி பாடத்துடன் தொடங்குகிறது. ஒரு குறிப்பிட்ட வாழ்வியல் திறனை மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் அனிமேஷன் படக்கதைகளும், புரிதலை மதிப்பிடும் வகையிலான எளிய வினாக்களும் வடிவமைக்கப்பட்டுள்ளன. செயல்பாடுகள் செய்வதற்கு தேவையான பொருள்களை, மாணவர்கள் அங்கேயே தெரிவு செய்து கொள்ளலாம்.

ஆசிரியர்கள் மாதத்தில் நான்காவது வாரத்தில் மாணவர்கள் பயிற்சி செயல்பாடுகளை மேற்கொள்ள உயர் தொழில்நுட்ப ஆய்வகத்திற்கு அழைத்துச்செல்ல வேண்டும். ஒவ்வொரு செயல்பாடும் மாணவர்கள் செய்து முடிக்க 20 நிமிடங்கள் தேவைப்படும். எனவே பள்ளியின் ஆய்வகங்களில் உள்ள கணினி எண்ணிக்கையின் அடிப்படையில், மாணவர்களை அழைத்து செல்ல தலைமையாசிரியரால் கால அட்டவணை வகுக்கப்பட்டு பின்பற்ற வேண்டும். ஒவ்வொரு பள்ளியிலும் உள்ள லேப் பொறுப்பாளர், கணினி, இணைய வசதி, ஹெட்போன் போன்றவை மாணவர்கள் எளிதாக செய்யத்தக்க வகையில் வைத்திருக்க வேண்டும்.

அனைத்துமாவட்ட சிஇஓக்களும், ஒவ்வொரு மாதத்தின் நான்காவது வாரத்தில் பள்ளிப் பார்வை மற்றும் ஆய்வுசெய்யும்போது, உயர்தொழில்நுட்ப ஆய்வகங்களை பார்வையிட்டு மாணவர்கள் செயல்பாடுகள் செய்வதை உறுதிப்படுத்தவேண்டும். இந்த செயல்பாடுகளின் மூலம் எமிஸில் இருந்து பெறப்பட்ட தரவுகளில் பங்குபெற்ற மாணவர்களின் செயல்திறனானது, செயல்திறன் மிக்கவர், திறன்மிக்கவர், சராசரி திறன் பெற்றவர், ஆலோசனைதேவைப்படுபவர், தொடர் ஆலோசனை தேவைப்படுபவர் என வகைப்படுத்தப்படும்.

ஒவ்வொருசெயல்பாடுகளும் முடிவுற்ற பின்னர், மாணவர்களை மதிப்பீடு செய்வதற்கு அவர்கள் வினாக்களுக்கு தெரிவு செய்த விடைகளின் அடிப்படையில் மேலே குறிப்பிட்டுள்ள 5 நிலைகளுக்குள் உள்ளடக்கப்படுவார்கள். இவற்றில் 4 மற்றும் 5 நிலைகளில் உள்ளடக்கிய மாணவர்களுக்கு, வாழ்வியல் திறன் சார்ந்து கூடுதல் ஊக்கம் பெறத்தக்க வகையில், தகுந்த வல்லுநர்களைக் கொண்டு ஆலோசனை வழங்கப்படும். இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.

# பிளஸ் 2 மாணவி கர்ப்பம்: வாலிபர் அதிரடி கைது

**திருவனந்தபுரம், ஆக. 26-** கேரள மாநிலம் மலப்புரம் அருகே உள்ள பொன்னானி பகுதியை சேர்ந்தவர் ஷம்நாத் (28). இவருக்குத் திருமணமாகி ஒரு குழந்தை உள்ளது. திருச்சூரில் வியாபாரம் செய்து வருகிறார். இந்நிலையில் ஷம்நாத்துக்கு திருச்சூரை சேர்ந்த பிளஸ் 2 மாணவி ஒருவருடன் பழக்கம் ஏற்பட்டது. தனக்கு திருமணமாகவில்லை என்று மாணவியிடம் கூறி நாடகமாடியதோடு, அந்த மாணவியை காதலிப்பதாக ஆசை வார்த்தை கூறியுள்ளார்.

இதனை நம்பிய மாணவியும் ஷம்நாத்துடன் பழகியுள்ளார். இந்நிலையில், ஒருநாள் ஷம்நாத் கடைக்கு சென்ற பிளஸ் 2 மாணவிக்கு ஜூசில் மதுபானம் கலந்து கொடுத்துள்ளார். அதை குடித்த மாணவி மயக்கமடைந்தார். இதன் பின் மாணவியை ஷம்நாத் பலாத்காரம் செய்துள்ளார்.

இந்நிலையில் சில தினங்களுக்கு முன் மாணவிக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டது. இதையடுத்து அவரது பெற்றோர் மருத்துவமனைக்கு கொண்டு சென்று பரிசோதித்தனர்.

இதில் மாணவி கர்ப்பிணியாக இருப்பது தெரியவந்தது. இதனால் அதிர்ச்சியடைந்த பெற்றோர் விசாரித்தனர். அப்போது ஷம்நாத் ஜூசில் மது கலந்து கொடுத்து தன்னை பலாத்காரம் செய்து விட்டதாக மாணவி அழுதபடி கூறினார். இதுகுறித்து குன்னம்குளம் போலீசில் புகார் செய்யப்பட்டது. போலீசார் போக்சோ பிரிவில் வழக்கு பதிவு செய்து ஷம்நாத்தை கைது செய்தனர்.



கைதான ஷம்நாத்

**இந்தியன் டெர்ரெய்ன் பேஷன்ஸ் லிமிடெட்**
பதிவு அலுவலகம்: எண் 208, வேளச்சேரி தாம்பரம் சாலை, நாராயணபுரம், பள்ளிக்கரணை, சென்னை–600 100.மின்னஞ்சல்: response.itfl@indianterrain.com: இணையதளம்: www.indianterrain.com
தொலைபேசி: 044–4227 9100, CIN; L18101TN2009PLC073017

**14 வது வருடாந்திர பொதுக்கூட்டம் அறிவிப்பு**

14 ஆகஸ்ட், 2023 தேதியிட்ட 14வது வருடாந்திர பொதுக்கூட்டம் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அலுவல்களை செயல்படுத்த நிறுவன உறுப்பினர்களின் 14வது வருடாந்திர பொதுக்கூட்டம் (AGM) திங்கட்கிழமை, 18 செப்டம்பர், 2023 அன்று இந்திய நேரம் காலை 11.00 மணிக்கு காணொளி காட்சி ("VC") / இதர ஒலி ஒளி வழிமுறை ("OAVM") மூலம் நடைபெறும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகத்தின் 28, டிசம்பர் 2022 தேதியிட்ட சுற்றறிக்கை 10/22 (இனிமேல் மொத்தமாக MCA சுற்றறிக்கைகள் ஆக குறிப்பிடப்படும்) மற்றும் ஜனவரி 5, 2023 செபி சுற்றறிக்கை எண் SEBI/HO/CFD/PoD–2/P/CIR/2023/4 மேலும் ஜனவரி 15, 2021 தேதியிட்ட செபி சுற்றறிக்கை எண் SEBI/HO/CFD/CMD2/CIR/P/2021/11 ஆகியவற்றுடன் நிறுவனங்கள் சட்டம், 2013 இன் பொருந்தும் விதிகள் மற்றும் அதன்கீழ் உருவாக்கப்பட்ட உரிய விதிகள், செபி (பட்டியல் கடப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) ஒழுங்குவிதிகள், 2015 விதிகளுக்கிணங்க 14வது வருடாந்திர பொதுக்கூட்டம் கூட்டப்படவுள்ளது. நிறுவனங்கள் சட்டம், 2013 இன் பிரிவு 103 கீழ் குறைந்தளவு எண்ணிக்கைக்காக காணொளி காட்சி/இதர ஒலி ஒளி வழிமுறை மூலம் பங்கேற்கும் உறுப்பினர்கள் கணக்கிடப்படுவர்.

மேற்கூறிய சுற்றறிக்கைகளுக்கிணங்க, உறுப்பினர்களுக்கு இதன்மூலம் தெரிவிக்கப்படுவதாவது 2022–23 நிதியாண்டுக்கான குழு அறிக்கை, தனிப்பட்ட தணிக்கையாளர்கள் அறிக்கை, தணிக்கை செய்யப்பட்ட நிதி அறிக்கைகள் அடங்கிய ஆண்டு அறிக்கையுடன் 14வது வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும் அறிவிப்பானது 18 ஆகஸ்ட், 2023 என்ற வரம்பு தேதியின்படி நிறுவனம்/ நேசனல் செக்யூரிடிஸ் டெபாசிடரி லிமிடெட், சென்ட்ரல் டெபாசிடரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் மற்றும் லின்க் இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட் ("RTA") வசம் மின்னஞ்சல் முகவரி பதிவு செய்யப்பட்டிருக்கும் உறுப்பினர்களுக்கு மட்டும் மின்னஞ்சல் மூலம் 26 ஆகஸ்ட், 2023 தேதியன்று அனுப்பப்பட்டுள்ளன. மேற்கூறிய சுற்றறிக்கைகளின்படி ஆண்டு அறிக்கை மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டம் அறிவிப்பின் காகித பிரதிகளை அனுப்பும் நிபந்தனை விலக்கப்பட்டுள்ளது.

14வது வருடாந்திர பொதுக்கூட்டம் அறிவிப்பு மற்றும் 2022–23 நிதியாண்டுக்கான ஆண்டு அறிக்கை ஆகியவை நிறுவனத்தின் இணையதளம் www.indianterrain.com, பங்கு பரிவர்த்தனைகளின் இணையதளம் அதாவது BSE லிமிடெட் ("BSE") மற்றும் இந்திய தேசிய பங்கு பரிவர்த்தனை லிமிடெட் ("NSE") ஆகியவற்றின் முறையே www.bseindia.com மற்றும் www.nseindia.com இணையதளங்களிலும் கிடைக்கப்பெறும்.

RTA / முதலீட்டு பங்கேற்பாளர்(கள்) வசம் மின்னஞ்சல் முகவரி பதிவு செய்யப்படாதிருக்கும் உறுப்பினர்கள் மின்னஞ்சல் மூலம் வருடாந்திர பொதுக்கூட்டம் அறிவிப்பு, ஆண்டு அறிக்கை மற்றும் மின்னணு வாக்குப்பதிவு பயனாளர் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை பெறுவதற்கு rnt.helpdesk@linkintime.co.in இல் RTA–க்கு மின்னஞ்சல் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மின்னஞ்சல் முகவரி பதிவு செய்தல் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு பயனாளர் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் பெறுதல் மேலும் வருடாந்திர பொதுக்கூட்டத்தின்போது தொலைதூர வாக்குப்பதிவு அல்லது மின்னணு வாக்குப்பதிவு நடைபெறும் வழிமுறை ஆகியவற்றின் விரிவான நடைமுறை செயல்பாட்டினை தெரிந்து கொள்வதற்கு உறுப்பினர்கள் மேற்கூறிய இணையதளங்களில் கிடைக்கப்பெறும் வருடாந்திர பொதுக்கூட்டம் அறிவிப்பினை படிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். உறுப்பினர்கள் காணொளி காட்சி / இதர ஒலி ஒளி வழிமுறை மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்பதற்கான விரிவான அறிவுறுத்தல்களுக்கு, உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக்கூட்டம் அறிவிப்பினை படிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். நிறுவனத்தின் உறுப்பினர்கள் பார்வையிடுவதற்காக வைக்கப்படும் முக்கிய ஆவணங்கள் மின்னணு முறையில் கிடைக்கப்பெறும்.

நிறுவனங்கள் சட்டம் 2013 இன் பிரிவு 91 மற்றும் செபி (பட்டியல் கடப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) ஒழுங்குவிதிகள் 2015 (பட்டியல் ஒழுங்குவிதிகள்) இன் ஒழுங்குவிதி 42 ஆகியவற்றின் படி, நிறுவனத்தின் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு மாற்று புத்தகங்கள் 12 செப்டம்பர், 2023 முதல் 18 செப்டம்பர், 2023 வரை (இரண்டு தேதிகள் உட்பட) மூடப்பட்டிருக்கும் என்று இதன்மூலம் மேலும் அறிவிக்கப்படுகிறது.

நிறுவனங்கள் சட்டம், 2013 இன் பிரிவு 108 மற்றும் நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014 இன் விதி 20, திருத்தப்பட்டவாறு மேலும் செபி (பட்டியல் கடப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) ஒழுங்குவிதிகள், 2015 இன் ஒழுங்குவிதி 44 ஆகியவற்றின் படி, இந்த அறிவிப்பில் அமைந்த அனைத்து தீர்மானங்கள் மீது தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் 14வது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு வசதிக்காக சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெடின் (CDSL) சேவைகளை நிறுவனம் பெற்றுள்ளது. உறுப்பினர்களுக்கு மேலும் தெரிவிப்பதாவது:

1. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் 14வது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்களை தீர்மானிக்க வரம்பு தேதி 11 செப்டம்பர், 2023 ஆகும். காகித முறையில் அல்லது காகிதமற்ற முறையில் பங்குகளை வைத்திருக்கும் அனைத்து உறுப்பினர்களுக்கும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு 5 (ஐந்து) நாட்கள் நடைபெறும் அதாவது புதன்கிழமை 13 செப்டம்பர், 2023 காலை 9.00 மணிக்கு தொடங்கி ஞாயிற்றுக்கிழமை 17 செப்டம்பர், 2023 மாலை 5.00 மணிக்கு முடிவடைகிறது. அதன் பின்னர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவை CDSL நிறுவனம் செயலிழக்கச் செய்து விடும்.

2. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் வாக்காளிக்காத உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்கலாம். வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்கும் வசதியை நிறுவனம் அளிக்கும்.

3. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் வருடாந்திட பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம், ஆனால் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மீண்டும் வாக்களிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஒருவேளை, ஒரு உறுப்பினர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களித்திருந்தால், தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

4. நிறுவனத்தின் பங்குகளை பெற்று உறுப்பினராகி மேலும் 11 செப்டம்பர், 2023 அன்று பங்குகளை வைத்திருந்தால் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் உள்ள விரிவான மின்னணு வாக்குப்பதிவு வழிமுறை அறிவுரைகளை படிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். எனினும், தொலைதூர மின்னணு வாக்குப்பதிவுக்காக ஏற்கனவே CDSL–ல் பதிவு செய்த நபர் தற்போதைய பயனாளர் அடையாள முகவரி (USER ID) மற்றும் கடவுச்சொல்லை (PASSWORD) பயன்படுத்தி வாக்களிக்கலாம்.

5. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு அறிவுரைகள் அடங்கிய வருடாந்திர பொதுக்கூட்டம் அறிவிப்பு மற்றும் ஆண்டு அறிக்கை ஆகியவை நிறுவனத்தின் இணையதளம் www.indianterrain.com மற்றும் CDSL மின்னணு வாக்குப்பதிவு இணையதளம் www.evotingindia.com இல் உள்ளது.

6. வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்பது மற்றும் மின்னணு வாக்குப்பதிவு முறையில் மின்னணு வாக்களிப்பது தொடர்பான ஏதேனும் விசாரணைகள் அல்லது விவகாரங்கள் இருப்பின் அதுகுறித்து www.evotingindia.com –ல், உதவி பிரிவு கீழ் கிடைக்கப்பெறும் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் ("FAQs") மற்றும் மின்னணு வாக்குப்பதிவு கையேட்டை பார்வையிடலாம் அல்லது helpdesk.evoting@cdslindia.com–க்கு கடிதம் எழுதலாம் அல்லது திரு. நிதின் குந்தேர் (022– 23058738) அல்லது திரு. ராகேஷ் தல்வி (022–23058542) தொடர்பு கொள்ளலாம். மின்னணு முறையில் வாக்கப்பளிப்பதற்கான வசதி தொடர்பான அனைத்து குறைகளும் திரு. ராகேஷ் தல்வி, மேலாளர், (CDSL) சென்ட்ரல் டெபாசிடரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட், A விங், 25வது தளம், மாரத்தான் பியூசரக்ஸ், மபட்லால் மில் காம்பவுண்ட்ஸ், என் எம் ஜோஷி மார்க், லோயர் பரேல் (கிழக்கு), மும்பை – 400013 அவர்களுக்கு அனுப்பப்படலாம் அல்லது helpdesk.evoting@cdslindia.com–க்கு மின்னஞ்சல் அனுப்பலாம் அல்லது 022–23058542/43 இல் அழைக்கலாம் அல்லது லின்க் இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட் (RTA) (மின்னஞ்சல் முகவரி – rnt.helpdesk@linkintime.co.in / கட்டணமில்லா எண் 18001020878) தொடர்பு கொள்ளலாம் அல்லது response.itfl@indianterrain.com இல் மின்னஞ்சல் மூலம் கீழே கையொப்பமிட்டவருக்கு அனுப்பலாம்.

உறுப்பினர்கள் CDSL அமைப்பு வழியே காணொளி காட்சி/இதர ஒலி ஒளி வழிமுறை மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் வசதியளிக்கப்படுகிறது. பங்குதாரர்கள் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அத்தாட்சிகள் பயன்படுத்தி பங்குதாரர்கள்/உறுப்பினர்கள் லாக்இன் கீழ் www.evotingindia.com இல் இந்த வசதியை பெறலாம். காணொளி காட்சி / இதர ஒலி ஒளி வழிமுறைக்கான இணைய இணைப்பானது நிறுவனத்தின் EVSN காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் பங்குதாரர்கள்/உறுப்பினர்கள் லாக்இன்னில் கிடைக்கப்பெறும்.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு நடைமுறைகள் நேர்மையாகவும் வெளிப்படையான முறையிலும் நடைபெற M/s. பிபி & அசோசியேட்ஸ், செயலாற்றும் நிறுவன செயலாளர்கள், சென்னை அவர்களை ஆராய்வாளராக நிறுவனம் நியமனம் செய்துள்ளது. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு முடிவுகள் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் அறிவிக்கப்படும் மேலும் நிறுவனத்தின் இணையதளம், CDSL, BSE மற்றும் NSE இணையதளத்திலும் வெளியிடப்படும்.

குழுவின் ஆணைப்படி
இந்தியன் டெர்ரெய்ன் பேஷன்ஸ் லிமிடெடுக்காக
ஒப்பம்/–
E. இளமுகிலன்
நிறுவன செயலாளர் & இணக்க அதிகாரி

தேதி: 26 ஆகஸ்ட் 2023
இடம்: சென்னை

# மிக்சிக்குள் காப்பர் வயர்போல் நிறத்தை மாற்றி தங்கம் கடத்தல்

## நாடகமாடிய பயணி கைது

**திருவனந்தபுரம், ஆக. 26-** கொச்சி விமான நிலையத்தில் மிக்சி மோட்டாருக்குள் காப்பர் வயர்போல சித்தரித்து நூதன முறையில் தங்கத்தை கடத்திவிட்டு நாடகமாடிய பயணி பிடிபட்டார்.

கேரளாவிலுள்ள திருவனந்தபுரம், கொச்சி, கோழிக்கோடு மற்றும் கண்ணூர் ஆகிய சர்வதேச விமான நிலையங்கள் வழியாகத்தான் இந்தியாவிலேயே பெருமளவு தங்கம் கடத்தப்பட்டு வருகிறது. இதைத் தடுப்பதற்காக சுங்கத்துறை மற்றும் வருவாய் புலனாய்வுத்துறை அதிகாரிகள் தீவிர சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆனாலும் பல்வேறு நூதன உத்திகளைக் கையாண்டு தங்கம் கடத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு கோழிக்கோடு கொடுவள்ளி பகுதியை சேர்ந்த முகம்மது என்பவர் குவைத்தில் இருந்து விமானம் மூலம் கொச்சி வந்தார். அவர் தன்னுடைய பேக்கில் ஒரு மிக்சி வைத்திருந்தார். எக்ஸ்ரே கருவி மூலம் அதை பரிசோதித்த போது மிக்சியின் உள்ளே மோட்டாரில் சுற்றப்பட்டிருந்த காப்பர் வயர் தங்கமாக இருக்கலாமோ என்று சுங்கத்துறை அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டது.

ஆனால் அது தங்கம் அல்ல என்றும், ஓணம் பண்டிகை வருவதால் வீட்டுத் தேவைகளுக்காக மிக்சியை கொண்டு வந்ததாகவும் அவர் அதிகாரிகளிடம் கூறினார். ஆனால் தீவிரமாக பரிசோதித்த பின்னரே மிக்சியை தரமுடியும் என்று அதிகாரிகள் கூறிவிட்டனர். பின்னர் நடத்தப்பட்ட பரிசோதனையில் அது காப்பர் கம்பி அல்ல என்றும், தங்கத்தின் நிறத்தை மாற்றி காப்பர் கம்பி போல மோட்டாரில் சுற்றி வைத்திருந்ததும் தெரியவந்தது. மொத்தம் 422 கிராம் தங்கம் இருந்தது. இதன் மதிப்பு ₹21 லட்சமாகும். இதையடுத்து தங்கத்தை கைப்பற்றிய அதிகாரிகள் முகம்மதுவை கைது செய்து நெடும்பாசேரி போலீசில் ஒப்படைத்தனர்.



மிக்சிக்குள் காப்பர் வயர்போல் நிறத்தை மாற்றி கடத்தப்பட்ட தங்கம்.

**மாண்புமிகு 3வது கூடுதல் சார்பு நீதிமன்றம், கோவை**
**I.A.No. 1/2023**
**O.S.No.203/2018**

பாலமுரளி
-மனுதாரர்/வாதி
-எதிர்-
வத்சலமணி,
க/பெ.சுப்ரமணியன் (எ) பி.என்.எஸ்.மணி,
எண்.27, 1வது வீதி, ராயப்பேட்டை,
சென்னை- 600 014
-எதிர் மனுதாரர்/பிரதிவாதி

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரர்/வாதி, எதிர் மனுதாரர்/ பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ள மனு/வழக்கானது வருகின்ற 05.09.2023 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அன்று காலை 10.30 மணிக்கு மேற்படி நீதிமன்றத்தில் மேற்படி எதிர்மனுதாரர்/ பிரதிவாதியாகிய தாங்கள் நேரிலோ, வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளவும் தவறும் பட்சத்தில் மேற்படி மனு/வழக்கானது ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

**S.E.Jayapal Chandran,**
Advocate, Coimbatore

Printed and published by **R.M.R. Ramesh** on behalf of Kal Publications Private Limited and printed at Dinakaran Press , Plot No.170. No.10, First Main Road, Nehru Nagar, Perungudi, Chennai - 600 096 and Published at 229, Kutchery Road, Mylapore, Chennai - 600 004. Ph.4220 9191. Fax: 4220 9200/01
Editor: **R.M.R. Ramesh**. RNI Regn. No. 24428/1973